සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Civics

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 9	**குடியியற்கல்வி கல்வி**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கான விடைகளை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து இடைவெளியில் எழுதுக.**

01. சனநாயகத்தின் அடிப்படைப் பண்பாக …….. யை காணலாம்.
(ஒருகட்சி முறை, சட்டத்தின் ஆட்சி, வரையறுக்கப்பட்ட வாக்குரிமை)

02. இலங்கையின் பிரதான சட்ட அதிகாரி …….. ஆவார்.
(பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதி, சட்டமா அதிபர்)

03. நேரடி சனநாயக ஆட்சி முறை அன்றைய காலத்தில் நடைமுறைப்படுத்த இலகுவாக இருந்தமைக்கான காரணம் …….. ஆகும்.
(தேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தமை, சனத்தொகை வரையறுக்கப்பட்டிருந்தமை, தீர்மானங்கள் எடுப்பது கஷ்டமாக இருந்தமை.)

04. மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி …….. எனலாம்.
(சமூகமயமாக்கம், கல்வியறிவுள்ள தன்மை, சமூக ஏற்றத்தாழ்வு)

05. ஒருவர் அன்றாட வாழ்வில் ஐந்து முக்கிய பணிகளில் ஈடுபட வேண்டும். அவற்றில் ஏனையவர்களுக்கு உதவுவது …….. யாக கொள்ளப்படும்.
(தனிப்பட்ட வாழ்க்கை, சமூகவாழ்க்கை, தொழில் வாழ்க்கை)

- **வினா இலக்கம் 6 – 10 வரையான கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

06. வரையறுக்கப்பட்ட வளங்களை முழுமையாக பயன்படுத்துவது உற்பத்தி திறன் எனப்படும். (……)

07. தன்னால் ஆரம்பிக்கப்பட்டு பேணப்படும் வேலைகள் சுயதொழில் என அழைக்கப்படும். (……)

08. தீர்மானம் எடுக்கும் செயல்களிலும் ஆட்சி நடவடிக்கைகளிலும் பிரசைகள் நேரடியாக தொடர்புபடுவது மறைமுக சனநாயகம் ஆகும். (……)

09. தற்போதைய சமூகம் எதிர்கொள்ளும் ஒரு முக்கிய பிரச்சினையாக போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு ஆகும். (……)

10. நிலையான அபிவிருத்தி என்பது மனித ஆற்றல்களையும் சுற்றுச் சூழல் சமநிலையையும் பேணுவதுமாகும். (……)

Past Papers Wiki

- **வினா 11 முதல் 15 வரையான வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. கடனட்டை பாவிப்பதால் ஏற்படும் தீமை.
    1. கடனட்டை இடத்துக்கிடம் கொண்டு செல்வது இலகு.
    2. வட்டியின்றி பணம் செலுத்த காலம் வழங்கப்படும்.
    3. உடனடி தேவைகளுக்கு கடன் பெறலாம்.
    4. இன்னுமொருவர் அதனை முறையற்ற முறையில் பாவிக்கலாம்.

12. மோதல் தீர்வு தொடர்பாக பயன்படுத்தப்படும் நீதிமன்ற செயற்பாடாக.
    1. தீர்பளித்தல் 2. பேச்சுவார்த்தை 3. இணக்கப்படுத்தல் 4. மத்தியஸ்தம் செய்தல்

13. தொழிலில் ஈடுபடும் ஒருவர் நேரத்தை சரியாக திட்டமிட்டு பயன்படுத்தாது விட்டால் ஏற்படும் பாதிப்பு.
    1. நிறுவன சட்டவிதிகளின் படி செயற்பட முடிதல்.
    2. வேலையில் தாமதம்
    3. நிறுவனத்திற்குள்ளே நல்ல பெயரை பெற முடியும்
    4. வாடிக்கையாளர்களை திருப்தி படுத்த முடியும்.

14. ஒரு நாட்டில் செயற்படும் அதிஉயர் சட்டமாக கூறக் கூடியது.
    1. தேசிய சட்டம் 2. அரசியல் யாப்புச் சட்டம் 3. குடியியல் சட்டம் 4. குற்றவியல் சட்டம்

15. கூட்டுறவுத்துறையின் நோக்கங்களில் அடங்காத விடயம்.
    1. உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல்.
    2. மக்களின் வாழ்க்கைத் தரத்தை குறைத்தல்.
    3. மனிதர்கள் சிறப்பாக வாழ வழியை உருவாக்குதல்.
    4. பொதுச் சேவைகளை ஒன்றாக சேர்ந்து நிறைவேற்றல்.

- **இலக்கம் 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு விடையினை எழுதுக.**

16. இலங்கையில் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற நிறுவனமாக ..... க் கூறலாம்.

17. மேலே 16ல் கூறிய நிறுவனம் நவீனமுறையில் ..... ஆட்சியில் உருவானது.

18. மேலே கூறிய நிறுவனம் உருவாக ஏதுவான காரணிகள் 2 தருக.

    ....

19. கீழே காட்டப்பட்டுள்ள படங்கள் குறித்தக் காட்டும் விடயங்களை எழுதுக.

A 

B 

    A - .....

    B - .....

20. மேலே கூறிய விடயங்களுக்கு அப்பால் உமது பிரதேசத்தில் தேவைப்படுகின்ற பொதுச் சேவைகள் 2 தருக.

    .....

    .....


(40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **முதலாம் வினாவுக்கு 16 புள்ளிகளும், ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.**

01. 1. உயர்தர வகுப்புக்கு செல்லும் போது கற்கக் கூடிய பாடத்துறைகள் 2 தருக. (02 புள்ளிகள்)
2. மோதல் தீர்வுக்காக பயன்படுத்தப்படும் 'பேச்சு வார்த்தை' முறையில் உள்ள பண்புகள் 2 தருக. (02 புள்ளிகள்)
3. இலங்கையில் தொழிற்றகமைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய நிறுவனங்கள் 2 தருக. (02 புள்ளிகள்)
4. தேர்தலின் போது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குள்ள இரு பிரதான முறைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
5. சமூகப் பாதுகாப்புக்காக பாடசாலையில் ஆற்றப்பட வேண்டிய பணிகள் 2 தருக. (02 புள்ளிகள்)
6. சட்டத்தின் பண்புகள் 2 தருக. (02 புள்ளிகள்)
7. சனநாயகம் ஓர் ஆட்சிமுறை போன்று வாழ்க்கை முறையாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. அதற்கான இரு காரணங்களை தருக. (02 புள்ளிகள்)
8. பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்கள் 2 தருக. (02 புள்ளிகள்)

02. 1. தேசிய சட்டத்தின் பிரிவுகள் 3 யும் பின்வரும் அட்டவணையில் குறித்துக் காட்டுக. (03 புள்ளிகள்)



2. சமூகப் பாதுகாப்பு செயற்பாட்டில் பொலிசாரால் நிறைவேற்றும் பணிகள் 04 தருக. (04 புள்ளிகள்)
3. சமூக பாதுகாப்பினை உறுதிப்படுத்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் தொடர்பாக பொதுமக்கள் பொறுப்புக்களும் கடமைகளும் பட்டியல்படுத்துக.

1. நீதிமன்றம் A ..... B .....
2. இணக்க சபை C .....
3. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை D ..... (04 புள்ளிகள்)

03. 1. தொழினுட்ப மாற்றங்களால் ஏற்படும் சாதகமான விளைவுகள் 02 ம், பாதகமான விளைவுகள் 1யும் இடைவெளியில் எழுதுக.

சாதகமான விளைவு .....

பாதகமான விளைவு ..... (03 புள்ளிகள்)

2. பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய பிரதான செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
3. தொழினுட்ப முன்னேற்றத்துடன் கீழ்வரும் துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அம்மாற்றங்களை வைத்து பொருத்தமான இடத்தில் ஆங்கில எழுத்துக்களை எழுதுக. (05 புள்ளிகள்)

A – மரபனு தொழினுட்பத்தை பயன்படுத்தல்.
B – அதி தொழினுட்ப கைத்தொழில் உருவாகுதல்.
C – மனித உழைப்பிற்கு பதிலாக இயற்திர சாதன பாவனை
D – பச்சை இல்லத்தில் பயிரிடல்.
E – இலத்திரனியல் தொழினுட்பங்கள் நனோ தொழினுட்பங்கள் பாவித்தல்.


விவசாயம்	கைத்தொழில்

04. 1. சனநாயகத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக. (02 புள்ளிகள்)
2. ஜனநாயக ஆட்சியில் பிரசை ஒருவருக்குள்ள உரிமைகள் 3 ஐ குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
3. இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் 2 தருக. (02 புள்ளிகள்)
4. இலங்கை மக்களுக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமையும் சர்வசன வாக்குரிமையும் வழங்கிய ஆனைக்குழுவினை முறையாக குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
5. வாக்களிப்பின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 2 தருக. (02 புள்ளிகள்)

05. 1. இலங்கையில் தற்போது செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் 3 னை கூறுக. (03 புள்ளிகள்)
2. உள்ளூராட்சி மன்றமொன்றின் பிரதானியின் அதிகாரங்கள் 2 தருக. (02 புள்ளிகள்)
3. உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)
4. உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பில் பொதுமக்களால் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் 3 தருக. (03 புள்ளிகள்)

06. 1. மோதல் ஏற்படும் தரப்பினர் 2 னை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
2. நீங்கள் மோதலில் முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினையையும், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் 2 யும் குறிப்பிடுக.
மோதல் A ……..
பாதிப்புக்கள் B …… C …… (03 புள்ளிகள்)
3. மோதல் தீர்விற்கு தேவையான பண்புகள் 3 தருக. (03 புள்ளிகள்)
4. மோதலை சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதனால் ஏற்படும் நன்மைகள் 3 தருக. (03 புள்ளிகள்)

07. 1. கடந்த காலங்களில் தொழில் பயிற்சியைப் மக்கள் குடும்ப அங்கத்தவர் மூலமாக பெற்றுக் கொண்டனர். கீழே காட்டப்பட்டுள்ள படங்கள் காட்டும் விடயங்கள் யாது? (02 புள்ளிகள்)



A. .....



B. .....

2. தொழில் வெற்றிட அறிவித்தல் தொடர்பான விபரங்களை காட்டும் முறைகள் 3 தருக. (03 புள்ளிகள்)
3. நேர்முக பரீட்சைக்கு சிறப்பாக முகங் கொடுக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)
4. நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் 3 தருக. (03புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** குடியியற்கல்வி

Civic விடைப்பத்திரம் - தரம் 9

பகுதி - i

1. சட்டத்தின் ஆட்சி
2. சட்டமா அதிபர்
3. தேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தமை
4. சமூக ஏற்றத்தாழ்வு
5. சமூக வாழ்க்கை

6. √	7. √	8. X	9. √	10. X
11. 4	12. 1	13. 2	14. 2	15. 2

16. உள்ளூராட்சி மன்றம்
17. பிரித்தானியர்
18. பெருந்தோட்டங்களுக்கு பாதை புனரமைப்பு, செய்தி பரிமாற்றம்.
19. A – குழாய் கிணறுகள் B – கழிவு முகாமைத்துவம்
20. வாசிகசாலை, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா

பகுதி -ii

01.

1. கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம்
2. எளிய முறை, கலந்துரையாடுவதன் மூலம் தீர்வு
3. தொழினுட்ப கல்லூரி, தேசிய பயிலுநர் சபை, விதாதா
4. எளிய பெரும்பான்மை, விகிதாசார பிரதிநிதித்தவ முறை
5. முறையான கல்வியை பெற்றுக் கொள்ளல், சமநிலை அளுமையுள்ள பிரசைகள் உருவாக்குதல்.
6. அதிகார பலத்தை அடிப்படையாக் கொண்டு அரசங்கத்தினால் விதிக்கப்படுகிறது, சட்டத்தை மீறுவதால் தண்டணைக்குரிய குற்றம்.
7. அடுத்தவரின் கருத்தை மதித்தல், கலந்துரையாடல் மூலம் முடிவுகளை மேற்கொள்ளல்.
8. மாணவர்களுக்கு தேவையான நியாய விலையில் எழுது கருவிகள் வழங்குதல், சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல்.

02. 1. A -அரசியலமைப்புச் சட்டம் B – குற்றவியல் சட்டம்
C – குடியியல் சட்டம்

2. பாதையை கடக்க உதவிபுரிதல், பிரமுகங்களுக்கான பாதுகாப்பு, விழாக்கள், கூட்டங்கள் பாதுகாப்பு, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துதல்.
3. A – நீதிமன்றத்தை மதித்தல் B – நீதிமன்ற செயற்பாடுகளுக்கு கீழ்படிதல்.
C – தீர்ப்புகளுக்கு கீழ்படிதல்
D – கல்வி கண்காட்சி வேலைத்திடங்களுக்கு உதவுதல்.

03. 1. வேலைகள் இலகுவாக்கபட்டமை, விளைதிறன் அதிகரித்தல்.
பாதகம் - மனித வாழ்வு இயந்திரமயமாகியமை, சமூக சிக்கல்கள்.
2. உற்பத்தி, பங்கீடு, நுகர்வு
3. விவசாயம் A, D
கைத்தொழில் B, C, E

04. 1. மக்களின் அரசியல் அறிவு, புரிந்துணர்வு உயர்மட்டத்தில் காணப்படல்., நாட்டில் சிறந்த பொருளாதார நிலை காணப்படல்.
2. வாழ்வதற்கான உரிமை, கல்வி பெறுவதற்கான உரிமை, தான் விரும்பிய சமயத்தை பின்பற்றுவதற்கான உரிமை.
3. இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல், மாகாண தேர்தல்.
4. குறுமக்கலம், டொனமூர்
5. கல்வியறிவுடைய முன்மாதியான தலைவர் தெரிவு செய்தல்.
தேர்தலுக்கு முன்னர் வெளியிடும் கொள்கை விஞ்ஞாபனத்தை கருத்திற் கொள்ளல்.

05. 1. பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை
2. சபையை கூட்டுதல், ஒத்திவைத்தலும்
சபை நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்குதல்.
3. வரிகள், தீர்வைகள் ஏனைய வரிகளை விதித்தல், வீதி அணுமதிப் பத்திரம் வழங்குதல், வீடு நிருமாண வரைவுகளுக்கு அனுமதிபத்திரம்.
4. உரிய நேரத்தில் வரி செலுத்துதல், கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுதல், வழங்கப்படும் பொக்குவரத்து கட்டமைப்பு வழங்குதல்.

06. 1. தனிமனிதருள், தனக்கும் நண்பருக்கும் இடையில், குடும்ப ஒன்றினுள்
2. எழுதியிருந்தால் புள்ளி வழங்குக.
3. பொறுமை, ஒத்துழைப்பு, உரிமைகளை மதித்தல்.
4. சமாதானம், நிலைநாட்டப்படல், அரசியல் உறுதிப்பாடு வழங்களின் அழிவை இழிவளவாக்கல்.

07. 1. A – தந்தையுடன் வேலை செய்யும் சிறுவன்
B – தந்தையுடன் கமத்தொழில் செய்யும் சிறுவன்.
2. சுயவிபரக்கோவை, தொழில் விண்ணப்படிவம், கடிதம்,
4. வேலை தாமதம் ஏற்படாது, வளவீண் விரயம் தவிர்க்கலாம், மன அழுத்தமின்றி செயலாற்றலாம்.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank